## வைக்கோலா, வைரக்கல்லா?

வாசிக்க: மாற்கு 7:1-13

***"என் வார்த்தை நெருப்பைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறதல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:29)***

கதைகள் ஐவகைப்படும்: கதை சொல்வது, கதை விடுவது, கதை கட்டுவது, கதையடிப்பது, கதை திரிப்பது. இன்று பிரசங்க மேடைகளில் இதைத்தானே பார்க்கின்றோம் ? இன்றையக் கிறிஸ்தவ உலகெங்கும் புதிய வெளிப்பாடுகள், சொப்பனங்கள், தரிசனங்கள் இவைகளே பேச்சு. பார்வைக்கு இவை கவர்ச்சியாய்த் தோன்றினாலும் இவை "வைக்கோலும், புல்லுமே" அன்றி வேறல்ல. கடவுளது வார்த்தையாகிய நெருப்பின் பரிசோதனைக்கு இவை தாக்குப்பிடிக்காது (1 கொரி 3:12,13). சொப்பனங்களையும், தரிசனங்களையும்பற்றிப் பிரசங்கிமார் பேசியதும் மக்கள் பரவசமடைந்துவிடுகின்றனர். இப்படிப்பட்ட கூட்டங்களுக்குத்தான் திரள் கள் செல்கின்றன. ஆனால் கடவுளுடைய வசனமாகிய "கோதுமைக்கு" முன் சொப்பனங்கள், தரிசனங்களெல்லாம் "பதர்" போல்தான். பவுலுக்குக் கிடைத்த அளவு தரிசனங்களும், வெளிப்பாடுகளும் வேறு எவருக்கும் கிடைத்திருக்காது. ஆனாலும், பரதீசுக்குப் போய்வந்ததை அவர் தம்பட்டமடிக்கவில்லை. நம்மவர் களோ பாரீஸுக்குப் போய்வந்ததையே பட்டிதொட்டியெல்லாம் பறைசாற்றுவார்கள்!

பன்னிரண்டு வயதிலிருந்தே இயேசு வேதவாக்கியங்களில் தேறினவராயிருந் தார் (லூக் 2:42,46,47). ஆனாலும் தமது முதல் பிரசங்கத்தைப் பண்ணுவதற்கு முன் இன்னும் 18 ஆண்டுகள் தம்மை ஆயத்தப்படுத்தினார் (லூக் 3:23). அநேகர் காலத்திற்குமுன் பிரசங்கபீடம் ஏறுகின்றனர். வேதப் பண்டிதரான கமாலியேலின் கீழ் பவுல் அநேக ஆண்டுகள் பழைய ஏற்பாட்டை ஐயமறக் கற்றறிந்தார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும் (அப் 22:3). கற்பனைக் கதைகளும் சத்தியங்களும் கலந்துவிட்டால் செய்தி குழப்பமாகிவிடும். நூதன சீடர்கள் தவிர்க்கப்படவேண்டும் எனப் பவுல் கூறியதன் பொருள் இதுதான் (1 தீமோ 3:6).

பாரம்பரியங்களை அடியோடு விலக்கிவிட வேண்டுவதில்லை; எனினும் திரு வசனத்திற்கு முரண்பாடான எந்தப் பாரம்பரியத்தையும் தூக்கியெறிய வேண்டியது தான். பாரம்பரியத்தை வணங்க ஆரம்பித்தால் திருவசனத்தை அவமாக்கி விடுவோம். முடிவு நாட்களில், "ஒரு காலம் வரும். அப்பொழுது மக்கள் நலந்தரும் போதனையை நாடமாட்டார்கள்... மாறாக உண்மைக்குச் செவிசாய்க்க மறுத்துக் கட்டுக்கதைகளை நாடிச் செல்வார்கள்" (2 தீமோ 4:3,4).

பொருளாதாரத்தையே நாடிச் செல்லும் நாடுகளின் கண்டுபிடிப்பாகிய சுகபோக வாழ்வு உபதேசம் ஒரு புனைக் கதையாகும். இந்தக் கொள்ளை நோயை எளிதில் நிறுத்த முடியாது. திருச்சபைச் சரித்திரத்தில் வேறெந்த உபதேசமும் இவ்வளவு பிரபலமானதில்லை. "Smile! Jesus loves you!" இவ்வித வாசகங்களெல்லாம் ஸ்டிக்கருக்கு நன்றாக இருக்கும். ஆனால் மனந்திரும்பவேண்டிய ஒரு நபருக்கு "Repent! Jesus loves you!" என்பதும் சொல்லப்படாவிட்டால் இதுவும் ஒரு புனைக்கதைதான் (வெளி 3:19).

*இடிந்து போனோரைத் தூக்கவேண்டும்;*
*தூங்குவோரை இடிக்க வேண்டும்!*
*பிரசங்கிப்பது உள்ளத்தைத் துளைப்பதற்கே தவிர*
*சுகமாக சொறிந்துவிடுவதற்கல்ல!*